நான்கு 4 ஜாதியினருக்கும் அரசர்க்கும் பிராம்ஹணர்களுக்கும் வாஸயோக்கிய மானவைகளாகும்.

புத்திமான்கள், வைசியர்களுக்குக் கூறப்பட்டிருப்பவைகள், சூத்திரர்கள் வஸிப்பதற்கும் ஏற்றவைகளாகுமென்று அனுமதித்திருக்கிறார்கள். 184

கீழே கூறப்பட்ட அகலத்துடன் கூடியவைகளாகவும், அகலத்தைக்காட்டிலும் நீளமில்லாதவைகளாகவும், சதுரச்ர

𑌦𑌾𑌨𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍋𑌗𑍋𑌚𑌿𑌤𑌾𑌨𑌾𑌂
𑌆𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌶𑌾𑌲𑌾𑌃 𑌸𑌮𑍍𑌮𑌤𑌾𑌃 𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑍇𑌵 ॥ ௧௮௫ ॥

𑌸𑌦𑍍𑌮𑍇 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌗𑍃𑌹𑌯𑍋 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌨𑌵𑌾𑌂𑌶𑍇
𑌵𑌸𑍍𑌵𑌂𑌶𑌕𑍇 𑌗𑍃𑌹𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇 𑌰𑌸𑌾𑌂𑌶𑌕𑍇 𑌤𑌾 ।
𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌂 𑌗𑍃𑌹𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌸𑌦𑍍𑌮𑌹𑌾𑌰𑍇
𑌪𑌾𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌿𑌕𑍇 𑌹𑌾𑌰𑌮𑌿𑌤𑌿𑌃 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 ॥ ௧௮௬ ॥

𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌹𑌸𑍍𑌤𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌾𑌯𑌤𑌂 𑌚
𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌦𑌶𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌂 𑌚 ।
𑌷𑌟𑍍𑌸𑌨𑍍𑌧𑌿𑌕𑌂 𑌸𑌦𑌨𑌵𑌤𑍍 𑌵𑌸𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍀𑌯𑌂
𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 𑌸𑌦𑍍𑌮𑌵𑌤𑍍 ॥ ௧௮௭ ॥

மாக இருப்பவை ராஜபிராஹ்மண யோக்யமாம். நான்கு 4 சாலேகளுள்ள மாளிகைகள், தானுதிகள் செய்வதற்கும் ஸகலவிதமானபாஷண்டிகளும் வஸிப்பதற்கும் ஏற்றதாகு மென்று, ஸாதுக்கள் அனுமதித்திருக்கிறார்கள். 185

முனிவர்கள், மாளிகையின் விஸ்தாரமானது, நவாம்ச மாகவோ, (ஒன்பது 9 பாகங்களாகவோ) எட்டு 8 பாகங்க ளாகவோ, ஏழு 7 பாகங்களாகவோ, அல்லது ஆறு 6 பாகங் களாகவோ இருந்தால், கிரஹத்தின் (உள்ளுகளின்) விஸ்தாரமானது, இரண்டு 2 பாகங்களாகும். மாளிகையின் விஸ்தாரமானது, ஐந்து 5 பாகங்களானுல், கிரஹ (உள்ளின்) விஸ்தாரமானது, முறையேஒரு 1 அம்சம் ஆகும் என்று கூறியுள்ளார்கள். 186

($8 \times 8 = 64$) அறுபத்துநான்கு முழம் அகலமும், அதைப்போல் இரண்டு 2 பங்கு நீளமும், இரண்டு 2 வாயில் களுடையதும், பத்து 10 முகங்களுடையதும், இரண்டு 2 முத்தங்களுடையதும், ஆறு 6 ஸந்திகளுடையதுமான இந்தக் கட்டிடத்தை, வீட்டைப்போல் அலங்காரம் செய்ய

வ்யாஸே பஞ்சாம்ஶே நவாம்ஶாயதம் ஸ்யாத்
ஷட்பாகே ருத்ராம்ஶகை: ஸப்தபாகே ।
த்விஷட்பாகேऽஷ்டபாகே நவாம்ஶே
(த்விஸப்தாம்ஶை:) ஷோடஶாம்ஶைஸ்து தைர்க்யம் ||

ஏவம் பஞ்சவாயதம் ஸப்தஶாலே
பூர்வோக்தவ்யாஸாம்ஶகே பங்க்திபாகே ।
தைர்க்யம் ஸைகாதைகவிம்ஶாம்ஶகை: ஸப்த
யுக்தாம்ஶைர்விம்ஶகைர் த்யேகவிம்ஶாம்ஶை: || ௧௮௯ ||

வேண்டும். அது, ஏழு 7 வார (தாவார)ங்களுடன் கூடியதாக இருக்கவெண்டும். இப்படிப்பட்ட கிரஹமானது, பூதேவர்களான பிராம்ஹணர்கள் வஸிப்பதற்காகக் கூறப்பட்ட மந்திரம் (வீடு) ஆகும். 187

கிரஹத்தின் விஸ்தாரத்தை ஐந்து 5 பாகங்களாகக் கொண்டால், அதன் நீளமானது ஒன்பது 9 பங்குகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

விஸ்தாரம் ஆறு 6 பாகங்களானால், அதன் நீளம் பதிஞேரு 11 பங்குகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

விஸ்தாரம் ஏழு 7 பங்குகளானால், நீளம் பன்னிரண்டு 12 பங்குகளுடையதாக இருக்கவேண்டும்.

விஸ்தாரத்தை எட்டு 8 பங்குகளாகக் கொண்டால், நீளம் (பதினுன்கு 14 பங்குகளும்) விஸ்தாரம் ஒன்பது 9 பங்குகளானால், நீளம் பதினாறு 16 பங்குகளுடையதாகவும் இருக்கவேண்டும். 188

ஸப்த 7 சாலையில் (ஏழு 7 கட்டுகளுடன் கூடிய கிரஹத்தில்) இவ்விதமாக, ஐந்து 5 விதமான நீளம் கூறப்பட்டிருக்கிறது.

முன்பு கூறப்பட்டிருக்கின்ற விஸ்தாராம்சத்தை பத்து

ராஜ்ஞாமஶீதிஹஸ்தேந விஸ்தாராயா-
மேத்ரைஸ்த்ர்யம்ஶம் தத் த்ரிபாகம் லலாடைர்த்வாதஶாந்விதம் ।
த்ரித்வாரி த்ர்யங்கணம் த்வஷ்டஸந்தி
ஸ்யாத்தஶஶாலாயுதம் ஹர்ம்யமிதி (ஹி, வ) ப்ரோச்யதே ॥ ௧௯௦ ॥

வாஸஸ்த்ர்யம்ஶம் ஸார்த்தாம்ஶம் ஹ்யலிந்தம்
த்ர்யம்ஶைகாம்ஶம் வா ததர்த்தம் ப்ரவேஶ: ।
பாஹ்யேऽபாஹ்யே நாலநீப்ரம் ததர்த்தம்
ஶாலாநாம் ஸர்வதஸ் ஸாதாரணோக்தம் ॥ ௧௯௧ ॥

---

10 பங்குகளாகக் கொண்டால், அதன் நீளத்தை பதிமூன்று 13 பங்குகளாகக்கொள்ள வேண்டும்.

விஸ்தாரத்தை பதினாறு 16 பங்குகளாகக் கொண்டால் அப்பொழுது அதன் நீளத்தை இருபது 20 அல்லது இரு பத்திமூன்று 23 பங்குகளாகக்கொள்ள வேண்டும். 189

அரசர்கள் வஸிப்பதற்கான மாளிகையானது, விஸ்தாரத்தில், எண்பது 80 முழம் அளவுடையதாகவும், அதைப் போல் மூன்று 3 பங்கு நீளமுடையதாகவும், பன்னிரண்டு 12 லலாடங்களுடன் (நெற்றிகளுடன்) கூடியதாகவும் இருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

(அதை) மூன்று 3 துவாரங்களில் மூன்று 3 அங்கணங்களுடையதாகவும், எட்டு 8 ஸந்திகளுடையதாகவும், பத்து 10 சாலைகள் (உள்ளுகள்) உடையதாகவும் கல்பிக்க வேண்டும். இதற்கு "ஹர்மியம்" என்று பெயர். 190

இதில் வஸிக்குமிடமானது, மூன்றி 3ல் ஒரு 1 பங்காகும். அளிந்தமானது, ஒண்ணரைப் 1½ பங்காகும். பிரவேசம் (வழிநடப்பானது) மூன்றி 3ல் ஒரு 1 பாகம், அல்லது அதில் ஸரிபாதியளவாகும். நாளநீப்பிரமானது, (நாளம்-தாமரைத் தண்டு, நீப்பிரம்-வால்வீச்சு) இது, இங்கு, சாலைகளுக்கு ஸாதாரணமாகக் கூறப்பட்டுள்ளதாகும். 191

அனங்க³ணம் கர்ணக³தாங்க³ணான்விதம்

ப³ஹ்வாஸ்யவாஸம் ப³ஹிராநநான்விதம் ।

அந்தர்ப³ஹிர்வக்த்ரயுதம் ஹ்யஸீமகம்

வாஸம் ச ஸாதா⁴ரணதாங்க³ணான்விதம் ॥ ௧௯௨ ॥

மனுஷ்யஸம்ஹர்ம்யாதி³காஸ்து ஸ்தம்பே⁴ யுக்³மாயுக்³மம் யதா²

யுக்³மாயுக்³மகஸங்க்²யயா ஸ்தம்பே⁴ யுக்தா ஹர்ம்யாதி³காஸ்து ।

மத்⁴யத்³வாரம் நிஷித்³த⁴ம் ஸுரமஹீஶைவ த்³விஜபாலயே

ஶேஷாணாம் மத்⁴யஸ்யைவ விஹிதம் தத் ஸம்பதா³ம் ஹேதவே ॥

வாஸமானது, அங்கணமில்லாததாகவும், கர்ணகதமான அங்கணத்துடன் கூடியதாகவும், (கர்ணம்—மூலே) அனேக வழிகளுடையதாகவும், வெளியில் முகமுடையதாகவும், எல்லையைக் குறிப்பிடமுடியாத, அந்தர்முகம் பஹிர்முகங்களுடன் கூடியதாகவும், ஸாதாரணமாக அமையாத அங்கணத்துடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். 192.

மனிதர்கள் வஸிப்பதற்கான கிரஹங்களில், முழம், தூண், துலாம், முதலியவைகளை, இரட்டைப்படையாக இல்லாமல் (ஒத்தைப்படையாக) அமைக்கவேண்டும்.

தேவாலயங்களில், ஹஸ்தம் முதலியவைகளை, இரட்டைப்படையாகவும், ஒத்தைப்படையாகவும், அமைப்பதாகும்.

தேவர்கள், பிராம்ஹணர்கள், அரசர்கள் வஸிக்கும் கிரஹங்களில், மத்தியில் வாயல்படி இருப்பது நிந்திக்கப்படவில்லை. (அனுமதிக்கப்பட்டிருக்கிறது.)

மற்றவர்களின் (வைசிய-சூத்திரர்களின்) கிரஹங்களில், வாயல்படியானது, மத்தியபாகத்தையடுத்து இருக்கவேண்டுமென்று, விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமிருப்பது, ஸகலவிதமான ஸம்பத்துக்களுக்குமிருப்பிடமாகும்.

𑌗𑌰𑍍𑌭𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑍇 𑌭𑌿𑌤𑍍𑌤𑌿𑌭𑌾𑌗𑍇
𑌪𑌾𑌦𑌾𑌧𑌾𑌰𑌾𑌕𑍍 𑌶𑍍𑌵𑌭𑍍𑌰𑌕𑌾𑌯𑌃 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 ।
𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑍇 𑌗𑍃𑌹𑍇 𑌵𑌾
𑌶𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌧𑌾𑌮𑌸𑍍𑌵𑌵𑌶𑍍𑌯𑌮𑍍 ॥ ௧௯௪ ॥

𑌭𑌿𑌤𑍍𑌤𑌿𑌵𑍍𑌯𑌾𑌸𑍇𑌽𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌕𑍇 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌂𑌶𑌂
𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌽𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌵𑌿𑌹𑌾𑌯 ।
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌯𑍋𑌜𑌨𑍀𑌯𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑍇 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍 ॥ ௧௯௫ ॥

𑌵𑌂𑌶𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌨𑍈𑌵 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌾𑌨𑌾𑌂
𑌵𑌣𑌿𑌗𑌾𑌗𑌾𑌰𑌾𑌵𑌾𑌸𑍇 𑌯𑍋𑌜𑌨𑍀𑌯𑌮𑍍 ।
𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌮𑍂𑌨𑍀𑌨𑌾𑌂 𑌗𑍃𑌹𑍇 𑌤𑌤𑍍
𑌵𑌂𑌶𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌯𑍋𑌜𑌨𑍀𑌯𑌂 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 ॥ ௧௯௬ ॥

நேத்திரத்தில், பித்தியின் பாகத்தில், பாதத்தின் ஆதாரமான பள்ளத்திற்குள், கிரஹ மத்தியத்தின் இடது பக்கத்தில், அல்லது கிரஹத்தில், சாலைகளின் முக்கிய தாமாவில், ஆகியவிடங்களில், கிரமமாக, அவசியமாக, கர்பநியாஸம் செய்யவேண்டும். 194

சுவற்றின் விஸ்தாரத்தை எட்டு பாகங்களாக கல்பித்துக்கொண்டு, வெளிக்கையிலும், நான்கு (4) பாகங்களை விட்டுவிட்டு, உள்கையில், மூன்று (3) பாகங்களை விலக்கி விட்டு, அதன் மத்தியில் கர்பநியாஸம் செய்யவேண்டும். இது, தேவர்களுக்குக் கூறப்பட்டதாகும்.

பிராம்ஹணாதி ஜாதியினரின் வீடுகளில், கர்பநியாஸமானது, நிந்திக்கப்பட்டிருக்கிறது. (கர்பநியாஸம் செய்யக் கூடாது, என்பது பொருள்.) 195

பிராம்ஹணாதி ஜாதியினரின் கிரஹத்தில், வம்ச துவாரத்தைக் கல்பிக்கக்கூடாது. (வம்சம்—மூங்கில்)

பாஷண்ட்யாதிதபஸ்விநாஞ்ச
க்ருஹாணாம் தத: வம்ஶத்வார: ஸ்யாத் |
வ்யாஸத்ரிமாணே த்ரயோவிம்ஶதி-
யாவத்தாவத்து ஏகாதஶஸம்க்யா || ௧௧௭ ||

புரதோ பத்ரஸம்யுதம்
கர்ணே ஸபாகோஷ்டநீடாலங்க்ருதம் |
ப்ருஷ்டே வாரயுதம் வா
த்விலலாடம் ஸர்பகூடவத் || ௧௧௮ ||

ஸகுக்ஷிவித்ரத்வாராஸ்யம்
பார்ஶ்வத: பார்ஶ்வதோ விசித்ரதாராஸ்யம் மதம் |

பாஷண்டிகள் முதலியவர்களுடையவும், முனிவர்களுடையவும் கிரஹத்தில், வம்ச துவாரத்தைக் கல்பிப்பதாகும். அது, தூஷிக்கப்படவில்லை. 196

வீட்டின் நீளமானது, அதன் அகலத்தைப்போல் மூன்று (3) பங்கிருப்பது, முதலாவது நீள அளவாகும். பிறகு, அதிலிருந்து, இருபத்திமூன்று (23) பங்கு வரையில், இரண்டு (2) பங்கு வீதம் கூட்டிவர, நீளமானது பதினொரு (11) விதமாகும்.

முன் பக்கத்தில் பத்திர லக்ஷணத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

கர்ணத்தில், ஸபை, கோஷ்டம், நீடம், இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

பின்பக்கத்தில் வாரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

இரண்டு லலாடங்கள் (நெத்திகள்) உடையதாகவும், ஸர்பகூடத்தைபோன்றதாகவுமிருக்கவேண்டும்.

ஸதலம் விஹாரஶாலாக்யம்
ப்ராஸாதவதிதம் காரயேத் ॥ ௬௯ ॥

ஸர்வேஷாமபி வக்ஷ்யே
பாதாயாமம் து தஸ்ய விஷ்கம்பம் ।
ஸார்த்த த்ரிஹஸ்தமாதி
த்ரிபிரய ஷஷ்டி: கராம் ப்ரஸம்ஸ்தா து ॥ ௭௦ ॥

ஸார்த்த த்ரி (த்வி) சத்வாரிம்ஶகம்
யாவந்நவாம்ஶிகாயாம் ।

முன்பக்கத்தில ஒன்று (1) இரண்டு (2) அல்லது மூன்று (3) மாடிகளுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

பின் பக்கங்களில், விசித்திரமான நாஸிகள் அங்கங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்விதமிருப்பது விஹாரசாலையாகும். (புத்த பிக்ஷுக்கள் வஸிக்குமிடமாகும்.)

இந்த மாளிகையைப்போலவே கல்பிக்கவேண்டும்.

எல்லாவற்றிற்கும், பாதாயாமம் (தூணின் உயரம்), அதன் விஷ்கம்பம் (அகலம்) இவைகளைக் கூறுகிறேன்.

மூணரை (3½) முழம், தூணின் முதலாவது உயரமாகும். பிறகு மூணரை (3½) முழம் வீதமாகவும், அதன் பிறகு, ஆறு (6) முழம் வீதமாகவும் நாற்பத்தி மூணரை (43½) (நாற்பத்திரண்டரை 42½) முழம் வரையில் கூட்டிவர, தூணின் உயரமானது, ஒன்பது (9) விதமாகும்.*

---

* இங்கு முதலாவது நான்கு (4) அளவுகளை மூன்று (3) முழம் வீதமாகவும், அதற்குப் பிறகு ஐந்து (5) அளவுகளை ஆறு (6) முழம் வீதமாகவும் கூட்டி வந்தால், அவைகளின் கூடுதல் நாற்பத்திரண்டரை (42½) முழமாகும், என்பதை கவனித்துக்கொள்ள வேண்டும்.

வ்யாஸம் ஷடங்குலம் ஸ்யாத்
அர்த்தாங்குலவிவ்ருத்த்யா து ॥ ௨௱௧ ॥

தஶ து அந்தாங்குலாந்தம்
யாவந்நவதா விஸ்தாரம் ஸ்யாத் ।
ஷடாத்யேகாங்குலாந்தம் வா
யோஜ்யம் யுக்திக்ரமேண விவ்ருத்தி: ॥ ௨௱௨ ॥

ஸ்வ்யாஸகரம் த்ரிமாணம்
க்ருத்வா வஸுபிர்ஹரேத்தத்ர ஶிஷ்டே ।
த்வஜதூமஸிம்ஹஶ்வாநவ்ருஷ-
கரமஜவாயஸாஸ்து யோநிகணா: ॥ ௨௱௩ ॥

ஸர்வேஷாம் ஸ்வஜாதிமவ்ருஷபேஷு:
ஶம்ஸந்தி தத்ர ஶோபநாஸ்துஜ்ஞா ॥ ௨௱௪ ॥

தூணின் அகலமானது ஆறு (6) அங்குலமாகும், அத்துடன், அரை (½) அங்குலம் வீதமாக பத்து (10) அங்குலம் வரையில் கூட்டிவர, தூணின் அகலமானது ஒன்பது (9) விதமாகும்.

இவ்விதமே, ஆறு (6) அங்குலம் முதல், ஒரு (1) அங்குலம் வீதம், பதினான்கு (14) அங்குலம் வரையில் கூட்டிவர், தூணின் அகலமானது, ஒன்பது (9) விதமாகும் 20½

அறிவாளிகள், முன்பு கூறப்பட்டிருப்பதைப்போல், யுக்தியுடன் கல்பிப்பதுமாகும். 202

தூணுடைய விஸ்தாரமான முழத்தை (அளவை) மூன்றால் பெருக்கி, எட்டால் வகுக்கவேண்டும். அதன் மீதமானது, முறையே, 1. துவஜம் 2. தூமம் 3. ஸிம்ஹம் 4. நாய் 5. விருஷபம் 6. கழுதை 7. யானை 8. காக்கை என்னும் யோனிகணங்களாகும்,

ஏகத்ரிம்ஶத் ஹஸ்தவிஸ்தாராதூர்த்வம்(த்ரி)
த்விஹஸ்தம் த்விஹஸ்தம் வர்த்தயேத் ஷஷ்ட்யேக கராஸ்யாம் ।
ஶாலாபாஹ்யே விஶேஷேண கலாரீ
தீர்க்காயாமோ யதேஷ்டம் ஸ்யாத் வரூதிநீ ॥ ௨௫ ॥

பஹிரந்தஶ்ச விஷ்டா குட்யபாதாதிமண்டநா
ஶிகரஞ்சைவ ஸ்தூபாரூடம் மண்டபம் வா ।
ஸுரநரவிமாநாத்யாவ்ருதா ஸா வரூதிநீ
பவநதலவிஹீநைக பூமித்விபூம்யந்தா ॥ ௨௬ ॥

வ்யஞ்ஜநாவரணே த்ருதீயகே வா
ஸஹாரே ஸ்தாநம் து யோஷிதாம் ।

இவைகளில், துவஜம், மிருகம் (ஸிம்ஹம்) விருஷபம், யானை, இவைகள், சுபகரமான யோனிகளாம். மற்றவைகள், அசுபயோனிகளாம். 204

சாலைக்கு (வீட்டுக்கு) வெளியில், முப்பத்தோரு 31 முழம் விஸ்தாரத்திற்குமேல், அறுபத்தோரு 61 முழம் வரையில், இரண்டு 2, இரண்டு 2, முழம் வீதம் அகலத்தைக் கூட்டிவரவேண்டும். அதன் நீளமானது, விருப்பம்போல் இருப்பதாகும், இதற்கு, "கலூரி" என்று பெயர். 205

குட்டியம், பாதம், இவைகளின் உருவத்தை உள்ளும் புறமும் அலங்காரம் செய்வது, விரும்பத்தக்கதாகும்.

சிகரமானது, ஸ்தூபாரூடமாக இருக்கவேண்டும். அது மண்டபமாக இருப்பதுமாகும்.

அந்த கலூரியானது, தேவர்கள், மனிதர்களின் விமானம் முதலியவைகளால் சூழப்பட்டிருக்கவேண்டும்.

அது, பவனதலமில்லாமல், ஏகபூமி, துவிபூமிகளில் கல்பிக்கப்பட்டிருக்கவேண்டும். 206

[illegible]

[illegible] || [illegible] ||

[illegible]

[illegible] ।

[illegible]

[illegible] || [illegible] ||

[illegible]

[illegible] ।

முதலாவது ஆவரணத்தில் [illegible] இரண்டாவது ஆவரணத்தில், பூர்வபாகத்தில், (கிழக்குப்பகுதியில்) ஸ்திரீகளின் வாஸஸ்தானம் இருக்கவேண்டும்

நைர்ருதி (தென்மேற்கு) திக்கில் பிரஸவஸ்தானம் அல்லது பஹிஷ்டாஸ்தானம் இருக்கவேண்டும். வாயுதிக்கு முதல் வடதிசைவரையிலாவது, ஸ்திரீகளின் வாஸஸ்தல மிருப்பதுமாகும். 207

தெற்குதிக்கில், போஜனசாலை இருக்கவேண்டும். வடக்குதிக்கில், பொருள் சேமித்துவைக்கு மிடமிருக்க வேண்டும். அக்கினி (தென் கிழக்கு) திக்கில், தானியாகாரம் (நெல்களஞ்சியம்) இருக்கவேண்டும். அதன் சூன்ய தலத்தில், சமயல் கட்டும் வியஞ்ஜனங்கள் வைக்குமிடமும் இருக்கவேண்டும். (வியஞ்ஜனம்—கரிகாய்கள், வருகாய்கள்.)

ஈசானிய திக்கில் பூஜாகிரஹமிருக்கவேண்டும்.

அங்கு கிணறும் ஸ்நானசாலையு மிருக்கவேண்டும். அல்லது, எங்கு கிணறு இருக்கிறதோ, அங்கு ஸ்நானசாலையு மிருக்கவேண்டும்.

யஸ்மிந் யத்³யுஜ்யதே ஸ்தா²நம்
ஸ்தா²நே ஹி தத்ர ஸம்ப்ரயோஜயேத் || ௨௱௯ ||

த்³வாராணி ச கவாடாநி ச
யுக்த்யா து ஸ்வாமிவாஞ்ச²யா |
அந்யச்ச ஶேஷம் ஸர்வம்
கார்யம் ப்ராகு³க்தமார்கே³ண நிஶ்சிததீ⁴: || ௨௱௧0 ||

அக்³நௌ ச பஶூநாம் கோ³ஷ்ட²ம் நைர்ருதே(அ)ஜாவிகாநாம்
வாயவ்யாம் மஹிஷாணாம் ஈஶாநே வாஜிஶாலா |
ப⁴வதி துரகஶாலா ஹஸ்திஶாலா ச தஸ்மிந்
தி³ஶி தி³ஶி ச ஸவ்யே வாஹநா த்³வாரவாமே || ௨௱௧௧ ||

மற்றவைகளை, எது எங்கு இருப்பது உசிதமென்று தோன்றுகிறதோ, அதை அங்கு உபயோகித்துக்கொள்ள வேண்டும். 209

வாயல்படிகள், சுவறுகள் இவைகளை, யஜமான னுடைய அபிப்பிராயப்படி, யுக்தியுடன் கல்பிக்கவேண்டும்.

நிச்சயபுத்தியுள்ளவன், மற்ற எல்லாவற்றையும், கீழே கூறியிருப்பதைபோல் செய்யவேண்டும். 210

மேலும், அக்கினிதிக்கில் பசுமாடுகளின் கொட்டில் இருக்கவேண்டும்.

தென்மேற்குதிக்கில் ஆடுகளின் கொட்டடில் இருக்க வேண்டும்.

வாயுதிக்கில், எருமைகளின் கொட்டிலிருக்க வேண்டும்.

ஈசானியமூலேயில், குதிரைகளின் லாயமும், கஜசாலேயு மிருக்கவேண்டும்.

ஒவ்வொரு திக்கிலும், துவாரத்தின் (வாயலின்) இடது பக்கத்தில், வாஹநங்கள் (வாஹநசாலேகள்) இருக்க வேண்டும். 211

ஸாமாந்யம் ஸர்வஜாதீநாமேதது₃க்தம் அதா₂து₄நா
ஸாலே ராஜ்ஞாம் யோஜநீயம் விஶேஷம் (ஷம்ஸ) |
த்ரிப்ராகாரம் ச த்ரிபங்க்தித்ரிபோ₄க₃ம்
ஶேஷாணாம் சாவஸ்து₂நீத்யா த்ரயாணாம் || ௨௧௨ ||

ஏகத்₃வித்ர்யந்த ஸாலாந்தராணாம்
ஸப்த த்ரீண்யேகாதி₃ தே₃வாலயேஷு |
யத்ப்ரோக்தம் மாநேநாத₂ வேஶ்மம்
தத்ஸர்வம் யோஜ்யம் விதி₄ஜ்ஞைர்நராணாம் || ௨௧௩ ||

இதி மயமதே வாஸ்துஶாஸ்த்ரே ஶாலாவிதா₄நம் நாம
ஷட்₃விம்ஶோऽத்₄யாய: ||

இது, நான்கு ஜாதியினருக்கும் பொதுவாகக் கூறப்பட்டதாகும்.

இவைகளை ராஜகிரஹங்களில், விசேஷித்துக் கல்பிக்க வேண்டும்.

மூன்று 3, பிராகாரங்கள், (சுவருகள்) மூன்று 3, பத்திகள், மூன்று 3 போகங்கள், (மூன்று 3 கட்டுகள்) இவைகளை மற்ற மூன்று ஜாதியினருக்கும், கூறியிருப்பதைப்போல் கல்பிப்பதாகும். 212

மனிதர்களுக்கு, ஒன்று 1 இரண்டு 2 மதில், அல்லது, மூன்று, 3 மதில்கள் வைப்பதாகும்.

தேவாலயங்களில், ஒன்று 1, மூன்று 3, அல்லது, ஐந்து 5 மதில்கள் இருப்பதாகும்.

முன்பு, வீட்டின் மானத்தினாலே (அளவினாலே) எது கூறப்பட்டிருக்கிறதோ, அதை, விதியை அறிந்தவர்கள், மனிதர்களுக்கு மட்டிலும் கல்பிக்கவேண்டும். 213

மயமதம் வாஸ்து சாஸ்திரத்தில்
சாலாவிதானமென்னும் இருபத்தாறுவது
அத்தியாயம் முற்றும்.

வர்ணாநாம் [illegible] க்³ருஹாணாம் வக்ஷ்யதேऽது⁴நா ।
சதுர்த³ண்டா³த் ஸமாரப்⁴ய த்³வித்³விஹஸ்தவிவர்த⁴நாத் ॥ ௧ ॥

த்ரிம்ஶத்³த⁴ஸ்தாவஸாநம் ச ஏகைகம் க்³ருஹமாநகம் ।
க்ஷுத்³ராணாமஷ்டதா⁴ [illegible] விதீ⁴யதே ॥ ௨ ॥

அஷ்டத³ண்டா³த் ஸமாரப்⁴ய த்³வித்³விஹஸ்தவிவர்த⁴நாத் ।
த்³வாத்ரிம்ஶத்³த³ண்ட³பர்யந்தம் மத்⁴யமாநாம் [illegible] ॥ ௩ ॥

* அஷ்டாதி⁴ ஶததண்டா³ந்தம் [illegible] ।

இபத்தேழாவது அத்தியாயம்

இப்பொழுது, பிராம்ஹணாதி ஜாதியினருக்கான கிரஹ விந்யாஸமானது கூறப்படுகிறது.

நான்கு 4 தண்டம் (கோல்) முதல், முப்பது 30 ஹஸ்தம் (முழம்) வரையில், இரண்டு 2, இரண்டு 2, முழம் வீதம் கூட்டிவர, ஒவ்வொரு அளவும், வீட்டின் மானமாகும். எனவே, க்ஷுத்திர (சிறிய) வீட்டின் அளவானது எட்டு 8 விதமாகும், (நான்கு 4 முழம் ஒரு 1 தண்டம்) என்று கூறப் பட்டிருக்கிறது.

மத்தரமான வீடுகளின் மானம் விதிக்கப்படுகிறது:—

எட்டு 8 தண்டம் முதல், முப்பத்திரண்டு 32, தண்டம் வரையில், இரண்டு 2, இரண்டு 2, முழம் வீதம் கூட்டிவர, (ஒவ்வொரு அளவும் மத்தியம) கிரஹத்தின் மானமாகும். 3

*எட்டு 8 தண்டம் முதல், நூறு 100 தண்டம்

---

* அஷ்டாதி⁴ [illegible] ।

*எட்டு 8 தண்டம் முதல் என்பது, அதற்குமேல் என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

வாடபித்தேரிஷ்டம் மானம் க்ருஹஸ்யாந்தஸ்ததோ ந்யஸேத் || ௪ ||

சதுரச்ரம் விசேஷேண ப்ராஹ்மணானாம் ச பூபுஜாம் ।
க்ஷத்ரியாணாம் சதுரம்சேன வைச்யாதீனாம் யாதிஷு ||

ஷோடசஹஸ்தாந்யூனம் க்ருஹமானம் ந காரயேத் ।
நவாஷ்டஸப்தஷட்ஹஸ்தைர் த்ர்யம்சம் சதுரம்சகம் || ௬ ||

த்ரி அதுராம்சாதிகம் வாபி தாவதுச்ராயகா ।
சதுரம்சோனதாரோச்ச ம் சதுர் தாவச்சிகா || ௭ ||

வரையில், ஒவ்வொரு தண்டமாகக் கூட்டிவர, முறையே அவை ஒவ்வொன்றும், உத்தம கிரஹத்தின் மானமாகும்.

இந்த அளவுகள் யாவும் வாடபித்திக்கு (வீட்டைச் சுற்றிலுமுள்ள சுவற்றிற்கு)க் கூறப்பட்ட மானமாகும். அதற்குள் கிரஹமானது இருக்கவேண்டும். 4

கிரஹமானது, பிராம்ஹணர்களுக்கும், அரசர்களுக்கும், விசேஷித்து சதுரச்ரமாக இருக்கவேண்டும்.

க்ஷத்திரியர் முதலியவர்களுக்கு, (கிரஹமானது) எட்டி 8ல் ஒரு 1 பாகம், ஆறிலே ஒரு 1 பாகம், நான்கி4ல் ஒரு 1 பாகம், நீளமுள்ளதாக இருக்கவேண்டும். 5

பதினாறு 16 முழத்திற்குக் குறைவாக கிரஹமானத்தைக் கல்பிக்கக்கூடாது.

(வீட்டைச்சுற்றிலும் வைக்கப்படும் சுவரானது) ஒன்பது 9, எட்டு 8, ஏழு 7, அல்லது ஆறு 6, முழம் உயரமுள்ளதாகவும், (உயரத்தில்) மூன்றி3ல் ஒரு 1 பாகம், அல்லது, நான்கி4ல் ஒரு 1 பாகம் அகலமுடையதாகவும், நான்கி4ல் ஒரு 1 பாகம் குறைவான உச்சியின் அகலத்தையுடையதாகவும், இருக்கவேண்டும்.

சதுர்தி³க்ஷு சதுர்த்³வாரோபேதா தல்பஸமாயுதா |
கோ³புரைஶ்ச ஸமாயுக்தா நாநாவயவஶோபி⁴தா ॥ ௮ ॥

ப³ஹிஷ்டாத் பரிகோ²பேதா ஸர்வரக்ஷா ஸமந்விதா |
வாடபி⁴த்திரிதி ப்ரோக்தா க்³ருஹபா³ஹ்யஸமாவ்ருதா ॥ ௯ ॥

ம்ருண்மயா வா லுமாபா³ரேஷ்டா த்ருணாத்³யாச்சா²தி³தா |
கலூரிகா வா ஸபாத³வேத்³யா வேதி³கா வாதி⁴ஶோபி⁴தா ॥ ௰ ॥

க்³ருஹக்ரியா ஹி த்³விவிதா⁴ பி⁴ந்நாபி⁴ந்நப்ரகாரத: |

(அதன் உச்சியானது) குடையின் தலையைப்போன்ற தாகவும், சத்திரத்தின் (குடையின்) நாஸியைப்போன்ற நாஸியையுடையதாகவும் இருக்கவேண்டும். (நாஸீ— சுவற்றிற்கு வெளியில் நீண்டிருக்கும் பாகம்,) 7

(அந்தச் சுவரானது) நான்கு 4 திக்குகளிலும் நான்கு 4 துவாரங்களுடையதாகவும், தல்பத்துடன் (படுக்கும் வஸதியுடன்) கூடியதாகவும், பலவித அலங்காரங்களுடன் கூடிய கோபுரங்களுடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். 8

அது, வெளியில் அகழினல் சூழப்பட்டும், ஸகலவிதமான காவந்துகளுடன் கூடியதாகவுமிருக்கவேண்டும்.

வீட்டைச்சுற்றியுள்ள இந்தச் சுவற்றிற்கு, "வாடபித்தி" என்று பெயர் வழங்கிவருகிறது. 9

அது, மண்ணுல் கட்டப்பட்டதாகவோ, லுமையுடன் இருப்பதாகவோ, புல் முதலியவைகளினுலே மூடப்பட்டிருக்கவேண்டும்,

கலூரிகை, அல்லது, பாதங்களுடன் கூடிய வேதிகை (திண்ணை)யைக் கல்பிப்பதுமாகும். 10

கிரஹகாரியமானது இரண்டுவிதமாகும். அது வெவ்வேறு முறையுடன் கூடியதாகும்.

பின்னம் ச பிண்டபேதம் ச ஸம்யக் வக்ஷ்யே ததா யதா ॥ ௧௧ ॥

அஸந்திகம் பின்னரூபம் ஸஸந்திகம்
ஹ்யபின்னகம் பின்னரூபேஷு தேஷு வை ।
சதுர்க்ருஹம் திக்ஷு மதம் ப்ரதானகம்
விதிக்ஷு வா மண்டபகம் கலூரிகா ॥ ௧௨ ॥

வாடவாதிவிதிக்ஷு கேஹ: ப்ரயதோ க்ருஹம்
த்ரயம் த்விகம் சைகமேவம் தாரித்ர்யம் ।
தஸ்மாச் சதுஶ்ஶாலம் அநிந்திதம் ஸதா
விஸ்தாரம் தஸ்ய தத் மாநமுச்யதே ॥ ௧௩ ॥

அவைகளில், பின்னம், பிண்டபேதம், இவைகளை நன்கு கூறுகிறேன். 11

ஸந்தி (இணைப்பு) இல்லாமலிருப்பது பின்ன கிரஹமாகும்.

ஸந்தியுடன் கூடியது (ஒன்றோடொன்று சேர்ந்திருப்பது) அபின்ன கிரஹமாகும்.

அந்த பின்ன கிரஹங்களில், திக்குகளிலுள்ள நான்கு கிரஹங்கள் பிரதான கிரஹங்களாகும். விதிக்குகளில் மண்டபமிருக்கவேண்டும். இதற்கு "கலூரிகை" என்று பெயர். 12

வாடபித்திக்கு உள்கையில், மூன்று 3, இரண்டு 2, அல்லது, ஒரு 1 கிரஹமிருந்தால், அது, வறுமைக்கு இருப்பிடமாகும்.

ஆகையால், நான்கு 4 சாலைகளிருப்பது நிந்திக்கப்படவில்லை. (புகழப்பட்டிருக்கிறது.) எனவே,— அதன் மானத்தை (அளவை) விஸ்தாரமாகக் கூறுகிறேன்.

நீசாநாம் நீசமாநம் ஸ்யாத் ஶ்ரேஷ்டாநாம் ஶ்ரேஷ்டமுச்யதே ।
ஶ்ரேஷ்டமாநம் நிக்ருஷ்டாநாம் ஸர்வதா ந ப்ரயுஜ்யதே ॥ ௧௪ ॥

க்வசித்விஷ்ட நிக்ருஷ்டாநாம் யந்மாநம் ஶ்ரேஷ்டஜாதிஷு ।
அல்பே வா மஹதே வா ஸீமாஸூத்ரே விநிர்ணிதே ॥ ௧௫ ॥

ஆயதே சதுரஶ்ரே வா சதுஷ்ஷஷ்டிபதாந்விதே ।
ரஜ்ஜுவம்ஶஸிராஷட்கம் சதுஷ்கர்ணாஷ்டகம் ஸ்ம்ருதம் ॥ ௧௬ ॥

வஸ்துஶாஸ்த்ரம் ச யதோக்தம் வம்ஶயேத் வாஸ்துகோவிதஃ ।
ஸூத்ராதீநாம் ப்ரமாணம் ச யதா சைவ ஸர்வதோமுகம் ॥

கிரஹமானது, கீழ்ஜாதியினருக்குக் குறைந்த அளவுடையதாகும்.

சிறந்த ஜாதியினருக்குச் சிறந்த அளவு கூறப்பட்டிருக்கிறது.

கீழ்ஜாதியினருக்கு, சிறந்த அளவானது, உபயோகிக்கப்படுவதில்லை. 14

சில இடங்களில், கீழ்ஜாதியினருக்கு, மேல்ஜாதியினருக்குக் கூறப்பட்டிருக்கிற மானமானது விரும்பத்தக்கதாகும்.

மனையானது, சிறியதானாலும், பெரியதானாலும், அது, ஸீமாஸூத்திரத்தினால் (எல்லை வரையில் கல்பிக்கப்படும் நூலின் அளவினால்) நிச்சயிக்கப்பட்டிருக்கவேண்டும். 15

மனையானது, நீண்டசதுரமானாலும், ஸமசதுரமானாலும் அதை, அறுபத்தினான்கு 64 பாகங்களாகக் கல்பிக்க வேண்டும்.

வாஸ்து (மனை) சாஸ்திரத்தையறிந்தவர்கள், ரஜ்ஜு (கயிறு) வம்சம், (மூங்கில்) ஆறு 6, ஸிரைகள் (நரம்புகள்)

தஸ்யாங்க ஸந்திஸம்பந்தே ஸூத்ராதீநி விவர்ஜயேத் ।
ஸர்வஸம்பதியுஸூத்ராணி நாஶம் யாந்த்யம் யத்நம் ஸர்வதா ॥

இதி நாமாநி தந்நாம்நா அந்நாதி ஸூத்ர: பூர்வாணி ச ।
அந்நாலயம் தாந்யாலயம் தநாலயம் ஸுகாலயம் ॥ ௧௮ ॥

ப்ரதமம் வாஸ்துமத்யே து மண்டபம் பரிகல்பயேத் ।
வாஸ்துவிஸ்தாரத: மண்டபஸ்ய து விஸ்தரம் ॥ ௨௦ ॥

பஞ்சஷட்ஸப்தமாஷ்டநவாம்ஶைகமேவ வா ।

நான்கு 4, எட்டு 8. ஸந்திகள், இவைகளுடன், வர்ம, சூலம், இவைகளை விலக்கவேண்டும்.

ஸூத்திரம் முதலியவைகளுக்கு, கிரஹத்தின் அங்கங்களுடன் பீடை (ஸம்பந்தம்) ஏற்பட்டால், அது, எல்லாவற்றையும் (ஸகலவிதமான நன்மைகளையும்) அழித்துவிடும்.

ஆகையால், ஸகலவிதமான முயற்சியையும் செய்து ஸூத்திரம் முதலியவைகளை விலக்க வேண்டும். 17½

அன்னம், தானியம், தனம், ஸுகம், என்ற பெயர்கள் பூர்வாதி மத்திய ஸூத்திரங்களாகும். அந்த பெயர்களினால் நான்கு வீடுகளாகும். அவைகள், முறையே, அன்னாலயம் தானியாலயம், தனாலயம், ஸுகாலயம், என்பவைகளாகும்.

புத்திமான்கள், முதலில் வாஸ்துவின் மத்தியில் மண்டபத்தைக் கல்பிக்க வேண்டும்.

மண்டபத்தின் விஸ்தாரமானது, வாஸ்துவின் விஸ்தாரத்தில், நான்கில் 4ல் ஒரு 1 பாகம் இருக்க வேண்டும். 20

அது, ஐந்து 5, ஆறு 6, அல்லது ஏழி7ல் ஒரு 1 பாகமோ, எட்டு 8, அல்லது ஒன்பதி9ல் ஒரு 1 பாகமாகவோ இருக்க வேண்டும்.

ஸப்தஹஸ்தாதிஷண்ணாந்தம் த்விதிஹஸ்தவிவர்த்தநாத் ॥ உக ॥

ஷட்விதம் ஸப்தஹஸ்தாநாம் ஜ்யேஷ்டமத்யகநிஷ்டகம் ।
ஏகபக்திர் த்விபக்திர் வா சதுஷ்டாஷ்டபாதகம் ॥ உஉ ॥

த்விஜக்ஷத்ரியவைச்யாநாம் யுக்மபாதம் ப்ரகீர்த்திதம் ।
சூத்ராணாமந்யஜாதீநாமயுக்மம் ஸம்மதம் பவேத் ॥ உங ॥

த்விஜவர்ஜ்யவைச்யாநாம் வைசிஷ்ட்யம் மத்யவேதிகா ।
த்ரிகாலபலியுக்தா ச வாஸ்துமண்டலஸம்மிதா ॥ உச ॥

ஏழு 7, ஹஸ்தம் முதல் பதினெழு 17, ஹஸ்தம் வரையில் இரண்டு 2, இரண்டு 2, ஹஸ்தம் வீதம் கூட்டிவர ஆறு 6 விதமான அளவுகளாகும். இவைகள், முறையே, உத்தம மத்தியம, அதம (அதம—மத்தியம—உத்தம)மானங்களாகும். 21½

ஒரு 1 பத்தியாகவோ, இரண்டு 2, பத்தியாகவோ, நான்கு 4 அல்லது, எட்டு 8 தூண்களுடையதாக இருக்க வேண்டும்.

பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், இவர்களுக்கு, யுக்மபாதம் (இரட்டைப்படையான தூண்) இருக்க வேண்டும்.

சூத்திரர்களுக்கும் மற்ற ஜாதியினருக்கும், தூணானது, ஒத்தைப்படையாக இருக்க வேண்டுமென்று விரும்பப்படுகிறது. 23

க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும், பிராம்ஹணர்களுக்குக்கூறப்பட்டிருப்பதை போலவே (இரட்டைப் படையான தூண்களே) இருக்க வேண்டும்.

அதில், மத்தியில், வேதிகையானது (மேடையானது) விசேஷமாகும். (அந்த வேதிகையானது) மூன்று 3 காலங்களிலும் செய்யப்படும் பலியையடையக் கூடியதாகவும்,

ஸா த்ரிதாலஸமுத்ஸேதா⁴ தத்ஸமாயதவிஸ்த்ருதா |
தன்மத்⁴யே ப்³ரஹ்மபீட²ம் ஸ்யாத் வேதி³கார்த⁴ப்ரமாணத꞉ ॥ ௨௫ ॥

ஷட்³ஷட³ங்கு³லஹீனம் ஸ்யாத் தன்மானம் க்ஷத்ரவைஶ்யயோ꞉ |
ஶூத்³ராத்³யஜாதீனாம் ந கல்பயேத் ப்³ரஹ்மவேதி³கா ॥ ௨௬ ॥

ஸாயதே சதுரஶ்ரே வா தத்பீடா²க்ருதிமண்ட³பம் |
ப³லிபீட²ம் ஸமோத்ஸேத⁴ம் த்ரித்ரயம் பஞ்சதாலகம் ॥ ௨௭ ॥

ஶிலயா த்ருமிகாயாம꞉ † ஸப்தகாயாமமாத்ரக꞉ |

புஷ்பங்கள், கந்தம் இவைகளினலே பூஜிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். 24

அந்த வேதிகையானது, மூன்று 3 தாலம் (சாண்) உயரமுள்ளதாகவும், உயரத்திற்கு ஸமமான அகலமுடையதாகவுமிருக்கவேண்டும்.

அதன் மத்தியில், வேதிகையின் அரைப்பங்கு அளவில் "பிரம்ஹபீடம்", இருக்கவேண்டும். 25

க்ஷத்திரிய வைசியர்களுக்கு, அந்த பிரம்மபீடத்தின் மானமானது, முறையே, ஆறு 6, ஆறு 6, அங்குலம் குறைவாக இருக்கவேண்டும்.

சூத்திராதிகளான மற்ற ஜாதியினருக்கு, பிரம்ஹ வேதிகையைக் கல்பிக்கக்கூடாது. 26

பீடமானது, நீண்ட சதுரமானலும், ஸமசதுரமானலும், அதைப்போலவே, அதன் மண்டபமிருக்கவேண்டும்.

தலிபத்தின் உயரமானது, பஞ்சதாலம் முதல் ஏழு 7

---

† ஸப்தகாயாம இதி த்ருத꞉ ஸப்ததாலாம இதி பாடோ² யுக்த꞉ இதி பா⁴தி |

வஹ்நாம் ம்ருதும் ஸாராஹ்வ த்ருயோதிமாம் ம்ருணகா: ॥ ௨௮ ॥

தவயா பாதவிஷ்கம்ஹஸ்ரோ ஷாம் ஸவிவர்ஜிதா: ।
பாதோஷ்ராய ஷட்ஷ்டாம் ஷடஷாம்ஸோ தவெவ வா ॥ ௨௯ ॥

பாதோத்ஸே த்ரயத்ருஹஸ்தமம் அதந்துரம் அ வ்ருத்தகம் ।
வஸ்ஸம் ஸிதவணம் அ ஸம்ஹாதாராகர்தி: ஷ்ரதா ॥ ௩0 ॥

ஸிதவாதிரவதிர ஸம்ஹாஸ் விஜாராஜயோ: ।
விஷ்ர்யம் விஸிதம் கயமகம் வெஸ்யஸம்ஹா: வஜ்கீதிதா: ॥

தாலம் வரை (எட்டு 8 தாலம் வரையில்) மூன்று 3, மூன்று 3, அங்குலம் வீதமாகக்கூட்டிவர, ஒன்பது 9 விதமான உயரமுள்ளதாகும். 27½

பாதவிஷ்கம்பமானது, ஐந்து 5, அங்குலம் முதல், பதி மூன்று 13, அங்குலம் வரையில், ஒன்பது 9 விதமாகும். அதன் நுனியில் (அகலமான) எட்டிலில் ஒரு 1 பாகம் குறை வாக இருக்கவேண்டும்.

அதிஷ்டானமானது, பாதத்தின் உயரத்தில் அரை ½ பங்கு, அல்லது, ஆறில் ஒரு 1 பாகம் இருக்கவேண்டும். 29

பாதத்தின் உயரத்தில், மூன்றிலில் ஒரு 1 பாகம், நான்கி4ல் ஒரு 1 பாகம், சதுரச்ரமாகவும், வட்டமாகவும் இருக்கவேண்டுல்.

பாதத்தில், சித்திரகண்டமானது (கண்டம்—பாகம்) எட்டி8ல் ஒரு 1 பாகமாகும்.

இவ்விதமாக ஸ்தம்பத்தின் உருவமானது, கூறப் பட்டிருக்கிறது. 30

வன்னி, கருங்காலி, வெண்கருங்காலி, இவைகள், பிராம்ஹண-க்ஷத்திரியர்களுக்கு, ஸ்தம்பவிருக்ஷமாகும்.

ராஜாதநம் ச நிம்பம் ச ஶிலீந்த்ரம் பிஶிதிந்துகா: (கா:) ।
ஶூத்ராணாம் ஸ்தம்பவ்ருக்ஷாஸ்து த்வக்ஸாராஸ் ஸர்வயோக்யகா: ||

பக்வேஷ்டகாபி: ஸுதயா ஜ்ஞேயம் விப்ரக்ஷத்ரியயோ: ।
வைஶ்யாதீநாமபக்வாபி: நாநாலங்காரஶோபிதம் || ௩௩ ||

ப்ரபாவா தத்ர கர்தவ்யா தாருகௌஸீஶமாவ்ருதா ।
ம்ருத்ஸந்நவயோர்மத்யே து அர்த்ஷ்டம் அஷ்டகரா: || ௩௪ ||

ஸார்தஹஸ்தம் த்விஹஸ்தம் வா க்ஷேத்ரே தாமஶிலாமுதா ।

ஶிலீந்திரம், பிசிதம், இலுப்பை, இவைகள், வைசியர் களுக்குக் கூறப்பட்டவைகளாகும். 31

பழமுன்னிப்பாலை, வேம்பு, ஶிலீந்திரம், பிசி, திந்துகம், இவைகள், சூத்திரர்களுக்குக் கூறப்பட்ட ஸ்தம்பவிருக்ஷங் களாகும்.

துவக்ஸாரமான, (தோல் அழுத்த முள்ள)விருக்ஷங்கள், எல்லா ஜாதியினருக்கும் உபயோகமானவைகளாம். 32

மண்டபமானது, பிராம்ஹண - க்ஷத்திரியர்களுக்கு, சுட்ட கற்களினாலேயும் ஸுதையினாலேயும் கட்டப்பட வேண்டும்.

வைசியாதிகளுக்கு, பச்சை வெட்டுக் கற்களினாலே கட்டப்பட வேண்டும்.

மண்டபமானது, பற்பல அலங்காரங்களினால் அழகாக இருக்க வேண்டும். 33

அந்தவிடத்தில் (மண்டபமிருக்க வேண்டியவிடத்தில்) பிரபையையாவது (பிரபா—பானசாலை) அமைக்க வேண்டும். அது, கீத்துகளால் வேயப்பட்டிருப்பதாகும்.

[illegible] ||௩௫||

[illegible] ।
[illegible] || ௩௬ ||

[illegible] ।
[illegible] || ௩௭ ||

[illegible] ।
[illegible] || ௩௮ ||

கிரஹம் மண்டபங்களுக்கு மத்தியில் மூன்று3 முழம், நான்கு 4 முழம், ஐந்து 5 முழம் அல்லது, ஆறு 6 முழம் நடைபாதை இருக்கவேண்டும். **34**

க்ஷுத்திர கிரஹமானால், மார்கவிஸ்தாரமானது, ஒரு 1 முழம், அல்லது, இரண்டு 2 முழம் இருக்கவேண்டும்.

மண்டபத்தைச் சுற்றிலுமுள்ள மார்கமானது, எங்கும் ஸமஅளவு இருக்கும்படி கல்பிக்கவேண்டும். **35**

அன்னுகாரம் முதலியவைகளின் மத்தியமானது, வாஸ்து மத்தியிலிருந்து பிரதக்ஷிணமாக (வலமாக) இருக்கவேண்டும்.

அவைகள், கிரமமாக, பன்னிரண்டு 12, ஒன்பது 9, ஏழு 7, ஐந்து 5, அங்குலமாகும். **36**

பத்து 10, ஒன்பது 9, எட்டு 8, ஏழு 7, அங்குலம் … … … … … … … … … … … … ?

ஒவ்வொரு அங்கத்திலுமிருப்பது, அததன் ஸ்தம்ப ஸ்தாபன காரியத்திற்காகும். **37**

வாஸ்து மத்தியிலிருந்து முறையே வடக்கு, கிழக்கு தெற்கு, மேற்கு, என்ற முறையில் இருக்கவேண்டும்.

அந்த:ஸ்தவாந்தி கேஹாந்தி வாஸ்துந: பஹி:ஸ்தவத் ।
மஹீயஶேந்த்ரபல்லாடம்ருகாதிதி பதாஶ்ரிதம் ॥ ௩௯ ॥

ஸௌக்யம் மஹீதராவாஸம் தத்தாயாமம் அத ப்ருவே ।
பஞ்சாதி நவஹஸ்தாந்தம் யத்யாயாமம் ச தஶாயாமம் ॥ ௪௦ ॥

ஸப்தைகாதஶஹஸ்தம் ஸ்யாத் இதி த்ரைதயம் விது: ।
சுல்லீ ஸர்வேஷு கேஹாநாம் க்ருஹாந்தம் விஸ்த்ருதம் ஸமம் ॥

கிரஹாங்கிரி மத்தியம் பித்திமத்தியமானது, மத்தியமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. 38

உள்ளுகள், உள்கையில் நிலைப்படியுள்ளவைகளாக இருக்கவேண்டும். வாஸ்துவானது வெளிக்கையில் நிலைப்படியுடையதாக இருக்கவேண்டும்.

பிராமணர்களின் வாஸஸ்தலமானது (முக்கிய கிரஹமானது) மஹீதரபதம், இந்துபதம், பல்லாடபதம், மிருகபதம், அதிதிபதம், இவைகளிலிருந்தால் ஸௌக்கியத்தை யளிக்கும். ஆகவே, அதன் அகலம் நீளத்தைக் கூறுகிறேன்.

அதன் மானமானது, ஐந்து 5 முதல் ஒன்பது 9 ஹஸ்தம் வரையில் (1) ஒன்பதரை 9½ அல்லது பத்தரை 10½ ஹஸ்தம் (2) ஏழு 7 அல்லது பதினொறு 11 முழம் என்று மூன்று 3 விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.*

எல்லா வீடுகளிலும், சுல்லியானது (அடுப்பங்கரையானது) உயரமாகவும், கிரஹாந்தம் வரையில் (வீட்டின் கோடிவரையில்) விஸ்தாரமாகவுமிருக்கவேண்டும். 41

அதன் சுவரானது, தூணின் உயரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும்.

---

*இங்கு விஷயம் தெளிவாக இல்லை.

[illegible] ॥ ௪௨ ॥

[illegible] ॥ ௪௩ ॥

[illegible] ॥ ௪௪ ॥

[illegible] ॥ ௪௫ ॥

அதன் விஸ்தாரமானது, தூணின் அளவைப்போல் மூன்று 3 பங்கு அளவுடையதாக இருக்கவேண்டும்.

முறையே, கிரஹவிஸ்தாரத்தில் நான்கி4ல் ஒரு 1 பாகம், அல்லது ஐந்தி5ல் ஒரு 1 பாக அளவு இடைவெளியுள்ளதாக இருக்கவேண்டும், இது, பதவியாஸம் என்று கூறப்பட்டிருக்கிறது. கிரஹவிஸ்தாரத்திலுலே கொள்வதுமாகும்.

எல்லா கிரஹங்களிலும், ஸ்தம்பத்தின் அகலமானது, அந்த கிரஹத்தின் விஸ்தாரமானது, எவ்வளவு முழம் இருக்கிறதோ, அவ்வளவு அங்குலமிருக்கவேண்டும்.

அதன் துவாரமானது, மஹேந்திராம்சத்திலிருக்கவேண்டும். முக்கியாம்சத்தில் வாரிநிஸ்ரவம் (ஜலதாரை) இருக்கவேண்டும். 44

கீழே கூறப்பட்டவைகள் யாவும், பிராம்ஹணர்களுக்கு ஸகலவிதமான ஸம்பத்தையுமளிப்பதாகும்.

மஹாநஸமானது (சமயலறையானது) மஹேந்திர பதம், ஆர்யகபதம், பிருசபதத்திலிருக்கவேண்டும். 45

த்ரிஹஸ்தம் பஞ்சஹஸ்தம் ச த்ர்யர்த்தஹஸ்தம் ஷடர்த்தகம் ।
அர்த்தஹஸ்தம் ஸப்தஹஸ்தம் அர்த்தாஷ்டாயஹஸ்தகம் ॥ ௪௬ ॥

பஞ்சஹஸ்தம் நவஹஸ்தம் பஞ்சமானம் உதாஹ்ருதம் ।
க்ருஹக்ஷதாம்ஸகே த்வாரம் ஜயந்தே வாரிநிஸ்ரவம் ॥ ௪௭ ॥

ப்ராச்யாவாஸம் ந்ருபஸ்யோக்தம் கோஶவாஹநவ்ருத்திதம் ।
க்ருஹக்ஷதார்க்கிகந்தர்வ ப்ருங்கராஜவிவஸ்வதி ॥ ௪௮ ॥

தாந்யாலயம் ப்ரகர்த்தவ்யம் தத்ப்ரமாணமதோச்யதே ।

சமயமரைக்கு மூன்று 3 முழம், ஐந்து 5 முழம் மூணரை 3½ முழம், ஆறரை 6½ முழம், நான்கு 4 முழம், ஏழு 7 முழம் நாலரை 4½ முழம், எட்டரை 8½ முழம், ஐந்து 5 முழம், ஒன்பது 9 முழம், என்று ஐந்து 5 விதமான அளவானது கூறப்பட்டிருக்கிறது.*

மஹாநஸத்தின் துவாரமானது, கிரஹக்ஷதாம்சத்தில் இருக்கவேண்டும். ஜலதாரையானது ஜயந்தாம்சத்திலிருக்க வேண்டும். 47

அரசனுடைய வாஸகிரஹமானது, கிழக்கு திக்கிலிருந்தால், அது பொக்கிஷத்தையும், வாஹனங்களையும் விருத்தி செய்யுமென்று கூறப்பட்டிருக்கிறது.

கிரஹக்ஷதாம்சம், அர்கிஅம்சம், கந்தர்வாம்சம், பிருங்கராஜாம்சம், விவஸ்வதம்சம், இவைகளில் தானியாலயத்தை (நெற்களஞ்சியத்தை)க் கட்டவேண்டும். அதன் அகலம் நீளங்களைக் கூறுகிறேன்.

---

* அங்கு பத்து 10 அளவுகள் இருப்பினும், ஐந்து 5 அளவுகள் கூறப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, ஆகையால், இரண்டு 2 இரண்டா2 ஆகப்பிரித்துக்கொண்டு, ஒன்று 1 அகலம், மற்றொன்று 1, நீளம் என்று கொள்ளவேண்டுமென்று தோன்றுகிறது.

பஞ்சஹஸ்தம் நவஹஸ்தம் ஷடர்த்தம் ச தஶார்த்தகம் ॥ ௪௯ ॥

ஸப்தைகாதஶ ஹஸ்தம் ஸ்யாத் நவத்ரயோதஶ ஹஸ்தகம் ।
ஏகாதஶ பஞ்சதஶ ஹஸ்தம் பஞ்சப்ரமாணகம் ॥ ௫௰ ॥

புஷ்பதந்தபதே த்வாரம் விததே வாரிநிர்கமம் ।
விஶாம் தக்ஷிணவாஸம் ஸ்யாத் தனதான்யஸுகாவஹம் ॥ ௫௧ ॥

புஷ்பதந்தே ஸுரே ஶோஷே வாருணே மித்ரகே பதே ।
தண்டுலம் தான்யஸமம் கிஞ்சிந்ந்யூநம் ப்ரகல்பயேத் ॥ ௫௨ ॥

ஶூத்ராணாம் பஶ்சிமே வாஸம் தனதான்யஸுகப்ரதம் ।

ஐந்து 5 முழம் அகலம், ஒன்பது 9 முழம் நீளம், ஆறரை 6½ முழம் அகலம், பத்தரை 10½ முழம் நீளம், ஏழு 7 முழம் அகலம், பதிஞெரு 11 முழம் நீளம், ஒன்பது 9 முழம் அகலம் புதிமூன்று 13 முழம் நீளம், பதிஞெரு 11 முழம் அகலம், பதினைந்து 15 முழம் நீளம், என்று ஐந்து 5 விதமான அளவுகளாகும். 50

அதன் துவாரமானது, புஷ்பதந்தபதத்திலிருக்க வேண்டும். ஜலதாரையானது, விததபதத்திலிருக்க வேண்டும்.

வைசியர்களுக்கு தெற்கில் வாஸஸ்தலமிருக்கவேண்டும். அது, தனம், தானியம், ஸுகம் இவைகளையளிக்கும்.

அது, புஷ்பதந்தபதம், ஸுரபதம், சோஷபதம், வாருணபதம், மித்திரகபதம், இவைகளில் தஞுலயமிருக்க வேண்டும்,

தஞுலயமானது, தானியாலயத்திற்கு ஸமமாக சிறிது குறைந்த அளவிலிருக்கவேண்டும். 52

சூத்திரர்களின் வாஸஸ்தலமானது, மேற்கு திக்கில்

ஸ்தம்போபரி போதிகம் வாஜனம் சோத்தரம் ப்ரகல்பயேத் ||53||

துலாஜயந்தீ பார்ச்வஸ்து பலகம் வாஸயேத் ததா ।
ஸம்ஸ்தாப்ய பூமிவத் ஸம்யக் ப்ரகல்பயேத் ||54||

கபோதம் தத்பதம் சைவ ஜாலகானாம் ததைவ ச ।
ஜாலாந்தரம் தத்பதம் சைவ த்வாதசாங்குலம் இஷ்யதே ||55||

முஷ்டிபந்தம் ம்ருணாளீ ச தண்டிகாம் ச ஸோபான க்ரியாம் ।
யதாயுக்த்யா ததைவ ச யதாயுக்தம் ப்ரகல்பயேத் ||56||

யிருக்கவேண்டும். அது, தனம், தானியம், பசுக்கள், (ஆடு மாடுகள்) இவைகளையளிக்கும்.

துவாரமானது, பல்லாடாம்சத்திலிருக்கவேண்டும். ஜல தாரையானது, ஸுக்கிரீவாம்சத்திலிருக்கவேண்டும். 52

இவ்விதமாக, நான்கு 4 ஜாதியினருக்கும், வாஸ்துவிதிக் கிரமமானது கூறப்பட்டிருக்கிறது.

ஸ்தம்பங்களுக்குமேலே, பொதிகை, உத்தரம், வாசனம், இவைகளைக் கல்பிக்கவேண்டும்.

துலாம், (உத்திரத்திலுள்ள குத்துக்கால்) ஜயந்தி, இவைகளின் பக்கவாட்டின் வழியாக. பலகையை, பூமிகல்பனத்தை செய்யவேண்டும். (பலகைகளை பூமியைபோல் சமமாக இருக்கும்படி பரப்பவேண்டும்)

கபோதம், தத்பதம் (கபோதபதம்-புறா உட்காரக் கூடிய இடம் கொடுங்கையின் இடைவெளி, ஜாலகங்கள், (மற்றுமுள்ள இடங்களின் இடைவெளிகள்) இவைகள், பன்னிரண்டு 12, அங்குலமிருப்பதாகும்.

முஷ்டி பந்தம், மிருணாளிகை, தண்டியம், ஸோபானக்கிரியை (கூறையவேய்தல்) இவைகளை, இடத்திற்கேற்றபடி அமைக்க வேண்டும்.

गृहस्य दक्षिणे पार्श्वे द्वारं पृथुलकं भवेत् ।
द्वित्रिहस्तं त्रिहस्तार्धं चतुर्हस्तं च पङ्क्तयः ॥

चतुःस्तम्भादिद्वात्रिंशत्स्तम्भा वा वास्तुमण्डपे ।
एकपङ्क्तिस्त्रिंशत्स्तम्भा तालेश्वरप्रभा ॥५८॥

सा पत्राणां सेष्टका वा फलितादिकच्छदा ।
गृहाणां गर्भविन्यासं तत्प्रवक्ष्याम्यनुक्रमशः ॥

देवानां चैव विप्राणां विशेषेण प्रभामताः ।

லுபாபிரச்சாதனத்தை, (வீட்டிற்குள், வெய்யில் மழை தாக்காமலிருக்கும் பொருட்டு, ஓடுமுதலியவைகளினுலே செய்யப்படும் மூட்டம்) முகபட்டியுடன் (முகப்பில் பட்டம் தெய்த்து) கல்பிக்கவேண்டும். 56

கிருஹத்திற்குத் தென் பக்கத்தில், பெரிதான மற்ருெரு துவாரமானது இருக்கவேண்டும்.

இரண்டு 2 முழம், மூன்று 3 முழம், மூணரை 3½ முழம், அல்லது நான்கு 4 முழம், அளவுடையதாக பத்திகளிருக்க வேண்டும். 57

வாஸ்து மண்டபமானது, நான்கு 4 தூண்கள் முதல் முப்பத்திரண்டு 32 தூண்கள் வரையில் பத்தியாக இருக்க வேண்டும்.

ஏகபக்தி என்று கூறப்படுகின்ற முப்பது பத்திகளினுலானது தாலேசுவரபிரபையாகும். 58

அது இலைகளினுல் மூடப்பட்டதாகவோ, இஷ்டைகளினுலானதாகவோ (மூடப்பட்டோ) கீத்துகளினுலோ, பனை மட்டைகளினுலே மூடப்பட்டதாகவோ இருப்பதாகும்.

கிருஹங்களுடைய கர்பஸ்தானத்தை வரிசையாகக் கூறுகிறேன்.

𑌪𑍁𑌷𑍍𑌪𑌦𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌭𑌲𑍍𑌲𑌾𑌟𑍇 𑌮𑌾𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌚 𑌗𑍃𑌹𑌕𑍍𑌷𑌤𑍇 ॥ ௯௰ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌨𑍇𑌤𑍍𑌰𑌭𑌿𑌤𑍍𑌤𑍌 𑌤𑍁 𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌦𑍌 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑍇 ।
𑌭𑌿𑌤𑍍𑌤𑌿𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌨𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑍇 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௯௧ ॥

𑌅𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌕𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌨𑌿𑌧𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌪𑌞𑍍𑌚𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌭𑌾𑌗𑌿𑌕𑍇 ॥ ௯௨ ॥

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌭𑌾𑌗𑌿𑌕𑍇 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌮𑍂𑌲𑍇 𑌵𑌿𑌧𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌗𑍂𑌢𑌤𑌰𑌂 𑌵𑌰𑌮𑍍 ॥ ௯௩ ॥

𑌦𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍇 𑌤𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍇 𑌗𑌰𑍍𑌭𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।

தேவர்களுக்கு கர்பவினியாசத்தை விசேஷித்து பாகுபாடுடன் கூறுகிறேன்.

புஷ்பதந்தபதம், பல்லாடபதம், மஹேந்திரபதம், கிரஹக்ஷதபதம், இவைகளில் கர்பத்தை வைக்கவேண்டும்.

சதுர்கிரஹத்தில், சௌமியாதியான, தென் பக்கம் நேத்திரபித்தியில் கல்பிக்க வேண்டும்.

பித்தி விஸ்தாரத்தை, ஒன்பது 9 அல்லது, எட்டு 8 பாகங்களாகச் செய்து கொண்டு, வெளிக்கையில் நான்கு 4 அம்சங்களும், உள்கையில் மூன்று 3 அம்சங்களும் நீக்கி, அதன் மத்தியில் கர்பத்தை வைக்கவேண்டும்.

யஜமானனுடைய வாசஸ்தானத்தின் விஸ்தாரத்தை ஐந்து 5, ஆறு 6, அல்லது ஏழு 7 பாகங்களாகச் செய்து கொள்ளவேண்டும், உள் பக்கம் நேத்திரத்தை நீக்கி, அதற்கு வலக்கையில் கர்பத்தை வைக்கவேண்டும்.

ஸ்தம்பமூலத்தில் கர்பத்தைகல்பிப்பது, மறைவானதும் சிறந்ததுமாகும். 63

துவாரத்தின் தென் (வலது) பக்கத்திலுள்ள காலில்,

வஸ்து மண்டபமத்யே வா தக்ஷிணே வா ஸ்தம்பமூலகே ॥ ௧௪ ॥

பிண்டபின்னமஸ்ரக்ருஹே கர்ப்பந்யாஸம் ப்ரகீர்த்திதம் ।
தஸ்யோபரி ப்ரகர்த்தவ்யம் முஹூர்த்தஸ்தம்பமுத்தமம் ॥ ௧௫ ॥

விதிஜ்ஞஸ்த்ர கதிரம் வாஸிரம் ச மதூகஜம் ।
ராஜாதநம் யதாஸர்வம் விஸ்தாராயாமஸம்யுதே ॥ ௧௬ ॥

ஹஸ்தார்க்கருத்ரபங்க்திநவவிதஸ்த்யாயாமஸம்யுதா: ।
தத்ஸங்க்யாங்குலவிஸ்தீர்ணா: ஸாக்ரே ஷட்பாகவிஸ்ஜிதா: ॥ ௧௭ ॥

ஸமதவா பக்ஷாஷ்டபாகோநம் திவாதகா: ।
வ்ருத்தசதுரச்ரவஜ்ராஷ்டாச்ர ஷோடசாச்ரதிஸீஷகா: ॥ ௧௮ ॥

சுவற்றில் மறைந்திருக்கும் காலில் கர்பத்தைக் கல்பிக்க வேண்டும்.

வாஸ்து மண்டபத்தின் மத்தியில், அல்லது அதன் தென்பக்கத்திலுள்ள தூணின் அடியில் வைக்கவேண்டும்.

பிண்ட பின்னமான் கிருஹத்தில் கர்பஸ்தானமானது ஐந்துவிதமாகும்.

அதற்குமேலே, உத்தமமான முஹூர்த்த ஸ்தம்பத்தை வைக்கவேண்டும்.

விதியை யறிந்தவர்கள், முஹூர்த்தஸ்தம்பத்திற்கு, கருங்காலி, வெளுப்பான கருங்காலி, இலுப்பை, பழமுன்னிப்பாலை, இவைகளை முறையே உபயோகிக்கவேண்டும். அதன் விஸ்தாரமும் நீளமும் கூறப்படுகிறது. ௬௬

தூண்கள், பன்னிரண்டு 12, பதினொன்று 11, பத்து 10, ஒன்பது 9, விதஸ்தி நீளமுள்ளவைகளாகவும், அவ்வளவு அங்குலம் விஸ்தாரமுள்ளவைகளாகவும், அதன் நுனியில், எட்டில் 8 ஒரு பாகம் குறைந்த அகலமுடைய

விப்ராதீநாம் சதுர்ணாம் ஹி ஸ்தம்பா: ஸம்ப்ரோக்தா: ஸுபூஜிதா: |
பிண்டஸாலா ச மத்யஸ்தா த்யக்தஸ்தம்பப்ரகல்பிதா: || ௬௯ ||

க்ருஹமத்யே ஹி பித்திஸ்ச பாதமத்யே விவர்ஜிதா |
தாமாஸ்ரித்ய து குல்யோபமம் த்வாரத்வயம் ப்ரசஸ்யதே || ௭0 ||

யத்ர அப்யந்தரத்வாரம் தத்வை தக்ஷிணதோ திஸி |
தக்ஷிணே க்ருஹபார்ஸ்வே து க்ருஹபார்ஸ்வே மஹாநஸே || ௭௧ ||

ஸௌம்யே து யத் த்வாரம் பஸ்சிமோத்தரதோ திஸி |
உத்தரே க்ருஹபார்ஸ்வே து பார்ஸ்வே பஸ்சிமதோ க்ருஹே || ௭௨ ||

வைகளாகவும், ஐந்து 5, நாலரை 4½, நான்கு 4, அல்லது மூன்று 3 தாலபிரமாணம் பூமியில் புதைக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். அதன் உச்சியானது, துண்டிக்கப்பட்ட மொட்டின் நுனியைப் போலவும், கொப்பள வடிவமாகவும் இருப்பதாகும். 68

நன்கு பூஜிக்கப்பட்ட, அல்லது சிறந்த இந்த ஸ்தம்பங்கள், பிராமணர் முதலிய நான்கு 4 ஜாதியினருக்கும் கூறப்பட்டவைகளாகும்.

பிண்டசாலையானது, மத்தியில் தூணில்லாமல் கல்பிக்கப்பட வேண்டும். கிருஹத்தின் மத்திய பித்தியும், மத்தியில் தூணில்லாமலிருக்கவேண்டும்.

அந்த சுவற்றைச் சார்ந்து, குலியாபமான (வாய்க் காலைப்போல) இரண்டு 2 துவாரங்கள் (வாயில்கள்) இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. 70

எங்கு அப்யந்தர துவாரம் (இடைக்கட்டு வாசல்படி) இருக்கிறதோ, அங்கு, அது, தென்கிழக்குதிக்கிலிருக்க வேண்டும்.

கிருஹத்தின் தென் பக்கத்திலும், சமயலறையின்

ஶாலாநாம் பிண்டஶாலாநாம் ஸந்திகர்ம ந காரயேத் ।
தேவதாஸ்தாபநம் பிண்டஶாலாநாம் து விதீயதே ॥ ௭௩ ॥

தத்ரோக்தே ப்ராஹ்மதேவாநாம் பதஜாதம் நிவேஶநம் ।
ஶேஷாணாம் து ந த்ருஷ்டா: ஸர்வே ரக்ஷணார்த்தம் நிவேஶிதா: ॥ ௭௪ ॥

க்வசித் பிண்டஶாலாஸ்வ மத்யம் ந ப்ரவிதீயதே ।
பார்ஶ்வயோ: ப்ருஷ்டத: பூர்வே பாதாநாம் ச ஸமுச்சய: ॥

ப்ரவக்ஷ்யாம்யத பூர்வேண ஹஸ்தாம்ஶம் பத்ரவஶாத் ஸ்ம்ருத: ।

பக்கத்திலும், உள்கையிலிருக்கும் துவாரமானது, வடமேற்கில் இருக்கவேண்டும்.

வடக்கில் கிருஹத்தின் பக்கவாட்டிலும், மேற்கில் கிருஹத்தின் பக்கவாட்டிலும், துவாரமிருக்கவேண்டும் 72

தனித்தனி உள்ளுகளுடன் கூடிய சாலைகளில் சந்தி காரியத்தை (ஒன்றோடொன்றை இணைக்கும் காரியத்தை) ச்செய்யக்கூடாது.

பிண்டசாலைகளில். (மண்சுவறுகளாலான வீடுகளில்) தேவதாஸ்தாபனமானது விதிக்கப்பட்டிருக்கிறது. 73

அங்கு, பிரம்ஹாலயம் மட்டிலும் கூறப்பட்டிருக்கிறது. மற்ற தேவதைகளுக்கு இடம் கூறப்படவில்லை.

மற்ற தேவர்களுக்கு பதங்கள் கூறப்படவில்லை. ஆகையால், மற்ற தேவதைகள் கிரஹத்தின் ரக்ஷைக்காக வைக்கப்பட்டவர்களாவார்கள். 74

சிலசமயங்களில், பிண்டசாலைகளில் மத்தியமானது விதிக்கப்படவில்லை.

இரு 2 பக்கங்களிலும், பின்பக்கத்திலும், முன்பக்கத்திலுமாக பாதங்கள், தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

த்ரிஹஸ்தே வா த்ரிஹஸ்தார்தே ஸ்தம்பா அஷ்டௌ ஸமாஹிதா: ||

அத சதுர்ஹஸ்தே ச ஸார்தே ச பஞ்சஹஸ்தே ச ஸம்ஸ்திதி |
கர்ஷஸ்தம்பாஸ்து ஷோடஶ ஷட்ஸார்தே ச ஸப்தகே || ௭௮ ||

த்ர்யஷ்டாம்ஶ்ய உதிஷ்டா: ஸார்தாஷ்டநவஹஸ்தகே |
அதர்ஷ்டாம்ஶ்ய: ஸ்தம்பா: தஶார்தைகாதஶேऽபி ச ||

பஞ்சாஷ்டஸ்தம்பஸம்யுக்தா: ஸ்தம்பா: ஸார்தத்வாதஶஹஸ்தகே |
த்ரயோதஶ விஸ்தாரே து ஷட்சத்வாரிம்ஶ: ஸ்ம்ருதா: || ௭௯ ||

அவைகளை, முழக்கணக்கின் வசமாக, வரிசையாகக் கூறு கிறேன்.

(கிரஹமானது) மூன்று 3 முழம், மூணரை 3½ முழம், (அகலம் நீளமுள்ளதாக) இருந்தால், அதில் எட்டு 8 தூண் களை வைக்கவேண்டும். 86

வீடானது நான்கு 4 நாலரை 4½ அல்லது ஐந்து முழ மிருந்தால், பதினாறு 16 தூண்களை வைக்கவேண்டும்.

ஆறு 6 ஆறரை 6½ அல்லது ஏழு 7 முழமிருந்தால், அங்கு இருபத்திநான்கு 24 தூண்களை வைக்கவேண்டும்.

எட்டரை 8½ அல்லது ஒன்பது 9 ஹஸ்தம் விஸ்தார முள்ளதாக இருந்தால், அதில்முப்பத்திரண்டு 32 தூண் களைக்கல்பிக்கவேண்டும்.

பத்தரை 10½ முழம், அல்லது பதினொரு 11 முழம் விஸ் தாரமுள்ளதாக இருந்தால், அதில் நாற்பது 40 தூண் களை வைக்கவேண்டும்.

பன்னிரண்டரை 12½ அல்லது பதிமூன்று 13 முழமுள்ள தாக இருந்தால், அதில் நாற்பத்தெட்டு 48 தூண்களிருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 79

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌤𑍁 𑌤𑌥𑌾𑌯𑌾𑌮𑍇 𑌸𑌮𑌾𑌃 𑌪𑌾𑌦𑌾𑌶𑍍𑌚 𑌸𑌂𑌖𑍍𑌯𑌯𑌾 ।
𑌸𑌪𑍍𑌤𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌷𑌡𑍍𑌭𑌾𑌗𑍇𑌨 𑌵𑌿𑌭𑌾𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௮௦ ॥

𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑍇𑌨 𑌪𑍁𑌰𑍋𑌭𑌾𑌗𑍇 𑌽𑌲𑌿𑌨𑍍𑌦𑌂 𑌸𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌨𑌵𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌸𑌾𑌰𑌕𑍇 ॥ ௮௧ ॥

𑌦𑌶𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌏𑌕𑌾𑌦𑌶𑌕𑌰𑌾𑌯𑌾𑌮𑍇 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌷𑌡𑌂𑌶𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌭𑌾𑌗𑌕𑍍𑌰𑌮𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௮௨ ॥

விஸ்தாரம், நீளம், இவைகள் சம அளவுள்ளதாகவும், தூண்களின் எண்கள் சமமாகவுமிருக்கவேண்டும்.

வீட்டின் விஸ்தாரமானது, ஏழு 7 முழமிருந்தால், அதை ஆறு 6 பாகங்களாகச் செய்து கொள்ளவேண்டும். அதில் இரண்டு 2 பங்கு அளவில், வீட்டின் முன்பக்கத்தில், அளிந்தத்தைக் கல்பிக்க வேண்டும். (அளிந்தம்—வாசல் படிக்கு முன் நீண்டிருக்கும் கொரடு)

வீட்டின் விஸ்தாரம், ஒன்பது 9 முழமாக இருந்தால், அதை எட்டு 8 பாகங்களாகச் செய்து கொண்டு, மூன்று 3 பாக அளவில் அளிந்தத்தைக் கல்பிக்கவேண்டும்.

வீட்டின் விஸ்தாரமானது, பதினொரு 11 முழமானால், அதை பத்து 10 பாகங்களாகச் செய்துகொண்டு, அவைகளில் நான்கு 4 பாக அளவில் அளிந்தத்தைக் கல்பிக்க வேண்டும்.

வீட்டின் விஸ்தாரமானது, பதிமூன்று 13 ஹஸ்தமிருந்தால், அதை பன்னிரண்டு 12 பாகங்களாகச் செய்து கொண்டு, அவைகளில் ஆறு 6 அம்ச அளவில் முன்பக்கத்தில் அளிந்தமானது இருக்கவேண்டும். இவ்விதம் பாக கிரமமானது கூறப்பட்டிருக்கிறது. 82

स्वामिस्थानस्य विस्तारं चतुःपञ्चाशदङ्गुलम् ।
षड्वृद्ध्याष्टसप्तत्यन्तं हि पञ्चधा तु विधीयते ॥ ८३ ॥

षष्ट्यंशं स्तम्भमुच्छ्रायं तु षोडशांशं विधीयते ।
षष्टिहीने कृते तस्मिन् षोडशांशेन वेदिका ॥ ८४ ॥

वेदिका द्विगुणं पादं शेषं प्रस्तरकं तथा ।
पादबन्धमधिष्ठानं पादं सर्वाङ्गसंयुतम् ॥ ८५ ॥

उत्तरोपरि भूतानि कपोत प्र(वृ)तिसंयुतम् ।
व्यालेभमकरैः सिंहैर्नासिकाद्यैरलंकृतम् ॥ ८६ ॥

ஸ்வாமி ஸ்தானத்தின் விஸதாரமானது, ஐம்பத்தி நான்கு 54 அங்குலமாகும். அதை பெரிதாகச் செய்து கொள்ள வேண்டுமானுல், எழுபத்தெட்டு 78 அங்குலம் வரையில் ஆறு 6. அங்குலம் வீதமாக விருத்தி செய்துவர, ஐந்து 5 வித மானமாகும். 83½

ஸ்தம்பத்தை அறுபது 60 பாகங்களாகச் செய்து கொண்டு, அதில் பதினறு 16 பாகங்களேக் குறைத்துக் கொண்டால், அது, வேதிகையாகும்.

வேதிகையைப்போல் இரண்டு 2 பங்கு அளவு பாதமாகும். மீதமுள்ளது, பிரஸ்தரத்தின் மானமாகும். 84½

அதிஷ்டானமானது, பாதபந்தமுள்ளதாக இருக்க வேண்டும். பாதமானது சகல விதமான அங்கங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும். 85

உத்தரத்திற்கு மேலே பூதங்களிருக்க வேண்டும். கபோத பிரதி (விருதி) யுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

வியாளம், (யாளி—அல்லது பாம்பு) யானே, மகரம், ஸிம்ஹம், இவைகளினுலும், நாஸிகை முதலியவைகளினுலும், அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும். 86

[illegible] ।
[illegible] ॥ ௮௭ ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௮௯ ॥

[illegible] ।
[illegible] ॥ ௯௦ ॥

துவாரம், தோரணங்களுடன் கூடியதாகவும். (துவாரம்—வாசல், தோரணம்-வெளி வாசல்) விசித்திரமான சுவருடையதாகவும், இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட ஸ்வாமியின் ஆவாசத்தை, கிருஹத்தில் கட்ட வேண்டும். இதில் மண்டபமும் கல்பிக்கப்பட
வேண்டும். 87

ஸ்வாமியாவாசத்தில், ஒருபொழுதும் மூங்கிலே வேயக் கூடாது.

ஸ்வாமிஸ்தானத்திலுள்ள தூண்கள் இரண்டு பத்தியாக இருக்க வேண்டும்.

ஒரு பாதத்தினுலே மற்றொரு பாதமானது மறைக்கப் பட்டதாக இருக்க வேண்டும். நெருக்கமாக வைக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஸ்தம்பங்கள், மூலஸ்தம்பத்தின் விஸ்தாரத்தில் பாதியளவு விஸ்தாரமுள்ளவைகளாக இருக்க வேண்டும். விருப்பமான அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும்

ஸ்வாமிஸ்தானமானது, வாஸஸ்தானங்களுக்கு மேலுக்குமேலே (வாசஸ்தானத்தைக் காட்டிலும் உயரமாக

[illegible] ।
[illegible] || ௧௧ ||

[illegible] ।
[illegible] || ௧௨ ||

[illegible] ।
[illegible] ||

இருக்கும்படி) இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்வாமிஸ்தானத்தின் சுவரானது, சுண்ணும்புடன் கூடிய செங்கற்களினுலேயாவது, பலகை களினுலேயாவது கல்பிக்கப்பட வேண்டும்.

ராஜாவாஸமானுல், தங்கம், தாமிரம் முதலியவை களினுலே, விசித்திரமாகக் கல்பிக்கப்படுவதாகும்.

சமயலறை முதலியவைகளில், இரண்டு 2 இரண்டு 2 பாஞ்சாலாதிலுபோச்சிரயங்கள் ஆகும். (லுபை—கூறை, உச்சிரயம்—உயரம்)

லுபாகாரிய கிரமங்கள்யாவும் முன்பு கூறப்பட்டிருப்பதை போலவே கல்பிக்கப்படவேண்டும்.

லுபையானது, லேசாகத் தகையப்பட்டால், அது, செல்வத்தையழிக்கும். கடுமையாகத் தகையப்பட்டால் கடனுக்குக் கட்டுப்பட வேண்டிவரும். (கடன் ஏற்படும்.)

வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் மூன்று சூலியாகும். அரசர்களுக்கு, ஐந்து 5 அல்லது ஏழு 7 சூலியாகும். பிராம்ஹணர்களுக்கு ஒன்பது 9 ஆகும். இவ்விதம் பதினேரு 11 சூலிகள், தேவர்களுக்காகும். 93

பாஷண்டாச்ரமிணாம் யுக்மம் ஸம்வஜ்ரம் த்விகுணம் விதீயதே ।
கர்பந்யாஸம் ஸங்க்ரமணம் கபித்தம் முக்யவாஸகம் ॥ ௯௪ ॥

சிலாஸ்தம்பம் தலம் குட்யம் நராணாம் வாஸே ந காரயேத் ।
ம்ருண்மயேஷ்டகமயம் ஹர்ம்யம் ஜோஷ்டை: ஹர்ம்யேஷ்டகமயம் ॥

ப்ரஹ்மஸ்தானம் தலம் நிம்னம் ப்ரஹ்மாங்க: ஸம்ப்ரசஸ்யதே ।
நிம்னம் ப்ரஹ்மஸ்தலே ஸ்தானம் வ்ருத்தம் ஸம்ப்ரசஸ்யதே ॥ ௯௫ ॥

ஸவேதிகாவேதி வஸாஸ்தானம் வாஸே ச ஸ்தாபயேத் ஸகம் ।
கேசிச் சேஷ ஹஸ்தவர்ஜிதார்த்த நாஹ்யாச்ச ஸஹிதம் வதந்தி வை ॥

பாஷண்டிகளுக்கும், துறவிகளுக்கும், சூலியானது இரட்டைப்படையாக இருக்க வேண்டுமென்று விதிக்கப் படுகிறது.

கர்பாதானம், சங்கிரமணம், கபித்தி, முக்கியவாசம், சிலாஸ்தம்பம், தலம், குட்டியம், இவைகளை மனிதர்களின் வாசஸ்தலத்தில் கல்பிக்கக்கூடாது.

(கர்பாதானம்—கர்பஸ்தாபனம், சங்கிரமணம்—சுற்றி வருவதற்கான பாதை, கபித்தி—முகத்தை மறைத்துச்சுவர், முக்கியவாசம்—முக்கியமானவாசஸ்தலம், சிலாஸ்தம்பம்—கருங்கல் தூண், தலம்—கருங்கல் தளவரிசை, குட்டியம்—கருங்கல் சுவர், இவைகளிருக்கக்கூடாது.) 94½

மிருண்மயமான (மண்சுவர்களினாலே எழுப்பப்பட்ட) வீட்டை, வைக்கோல் முதலியவைகளினால் மறைக்க (வேய) வேண்டும்.

அமிருண்மயமான (கற்களால் எழுப்பப்பட்ட) வீட்டை, ஓடுகளை வேய்ந்து மூடவேண்டும்.

பிரம்மஸ்தானத்தின் இடமானது, பள்ளமாக இருக்க வேண்டும். அது, கிரஹத்தின் மத்தியமாகும்,

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

கிரஹத்தில் பள்ளமான இடத்தில், ஜலம் ஓடக்கூடிய துவாரமானது (ஜலதாரையானது) மேலே மூடப்பட்டு இருக்கவேண்டும்.

சகல ஜாதியினருக்கும், மசூரகமானது, ஸ்தம்பத்தின் உயரத்தில், பாதியளவு இருக்கவேண்டும்.

சிலர், வீட்டு எஜமானனின் மார்பளவு, துடை உயரம், தொப்புளின் உயரம், இருக்கவேண்டுமென்று கூறுகிறார்கள்.

சதுர்கிரஹவிதியில், அதிஷ்டானமானது, கிரமமாக, யாமியாதியாக (தெற்கில் துவக்கி) இருக்கவேண்டும்.

இந்தவிதமான கிரஹங்களில், ஒருவனே முக்கியமானவனாக இருக்கக்கூடுமாகையால், அந்த யஜமானனுடைய போகஸ்தானத்தை அங்கேயே கல்பிக்கவேண்டும். 98½

ஒருவன், இரண்டு 2 லவணபாத்திரங்களை வடகிழக்கு திக்கில் வைக்கவேண்டும். 99

சுல்லியானது. (அடுப்பானது) அந்தரிக்ஷபதத்தில் இருக்கவேண்டும்.

சத்தியகபதத்தில், உரல் இருக்கவேண்டும்.

ஈசானதிக்கில், பசனஸ்தானம் (சமைக்குமிடம்) இருக்கவேண்டும். இப்படியிருப்பது, மனிதர்களுக்கு க்ஷேமத்தை யளிக்கும், 100

வஸாஹாரம் மாஶ்ருவெவாஶோத்தாஹ்யாம்
   நயநேபாங்கராமஜவ்ருஸ்யா ।
ரவிகாராம் மாயுரத்ரிகாஙுளாநம்
   கதிதம் பஞ்சவிதம் ஹி சுல்லிஹெஷு ॥ ௱௧ ॥

அதாரகூடாதிவஸாநாஸ்த்தாரம்
   வாடிதாரம் அதமேவ ப்ருஷ்டகூடே ।
ஸமதாஶம் விவாஶம் தா சுல்லிகாயாம்
   ஹ்யயநாநாமயோஷிநாநமேவ ॥ ௱௨ ॥

நரஶிஷ்டகவக நரவஸ்ய சுல்லி
   அதாரஶ்ரம் த்ருவாஸ்தாம் ஶஹீஸாராணாம் ।

அடுப்பானது, எட்டு 8 அங்குலம் அகலம், இருபத்தேழு 27, அங்குலம் நீளமுடையதாக இருக்கவேண்டும். அது இரண்டு 2, ஒன்று 1, ஆறு 6, ஐந்து 5, அங்குலம் வீதம், பன்னிரண்டு 12, அங்குலம் வரையில் விருத்தியடைவதால் ஐந்து விதமான மானபேதங்களை யுடையதாகும். 101

அதன் முகத்தின் விஸ்தாரமானது, நான்கு 4 அங்குலம் முதல், பன்னிரண்டு 12 அங்குலம் வரையிலிருப்பதாகும்.

அதன் உள்கூட்டின் விஸ்தாரமானது, அதே யளவு உடையதாகும்.

அதன் பிருஷ்டகூடமானது, (பின்தட்டானது) முன் பக்கத்திற்கு சமமான உயரமுடையதாக இருக்கவேண்டும். அதன் அகலமானது, சுல்லியின் சரிபாதியளவாகும்.

அதமர்களுக்கு, அதமமானத்தையே கொள்ள வேண்டும். 102

சுல்லியானது (அடுப்பானது) க்ஷத்திரியர்களுக்கு மனிதன் மண்டையைப்போலிருக்கவேண்டும்.

அதாயதகம் விப்ராம் வைஶ்யானாம்
இதரேஷாமிதரேஷு ஸர்வேஷ்விஷ்டம் ॥ ௱௩ ॥

ஏகத்ரிபஞ்சஸப்தநவைகாதஶ ஸம்க்யா:
அத்யேஷ்ட்ராணாம் மனுஷ்யாணாம் ஸமாஸமா: ஸ்ம்ருதா: ।
ஸர்வே: ஸமாவர்தி ஸமாவர்திஷு யோக்யா:
ஶேஷேஷு தத்தந்நிர்திஷ்டம் ததா முனிபி: ॥ ௱௪ ॥

ஆர்யகாம்ஶே ஐந்த்ராணீ(ண்யாம்) ச ஸவிந்த்ரகே ।
ஶ்ரவணம் து விவஸ்வாம்ஶே மித்ராம்ஶே து விவாஹகம் ॥ ௱௫ ॥

தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும், சதுரச்ரமாக இருக்கவேண்டும்.

வைசியர்களுக்கு நீண்ட சதுரமாக இருக்கவேண்டும்.

மற்றவர்களுக்கு, மற்ற வடிவங்களில் எல்லா வடிவங்களும் இஷ்டமாகும். 103

மனிதர்களுக்கு, அடுப்புகள், ஒன்று 1, மூன்று 3, ஐந்து 5, ஏழு 7, ஒன்பது 9, பதினொன்று 11, என்னும் எண்களை யுடையவைகளாகும்.

தேவாலயங்களில், ஒத்தப்படையாகவும், இரட்டைப் படையாகவுமிருப்பதாகும்.

கீழேகூறப்பட்ட யாவும், தேவர்கள், பிராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், இவர்களின் வீடுகளில் இருப்பதற்குத் தகுதி யுள்ளவைகளாகும்.

மற்றவர்கள் விஷயத்தில், அவரவர்களுக்கு கூறப்பட்டிருப்பதே இருக்கவேண்டுமென்று முனிவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆர்யகாம்சத்தில், அன்னம் புஜிக்கவேண்டும். இந்திராணி அம்சம், ஸவிந்திரகாம்சங்களிலும் போஜனம் செய்வதாகும்.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

விவஸ்வாம்சத்தில், கேழ்க்கவேண்டும். மித்ராம்சத்தில், விவாஹம் செய்யவேண்டும். 105

இந்திரஜயாம்சத்தில், க்ஷௌரம் செய்துகொள்ள வேண்டும். வாயு அம்சம், ஸோமாம்சத்தில் செய்துகொள்ளுவதுமாகும்.

சிலவு செய்தல், உபநயநம் இவைகளை, பித்ருபதம், தௌவாரிகாம்சம், ஜலாம்சம் இவைகளில் செய்ய வேண்டும்.

ஸுக்ரீவாம்சம், புஷ்பதந்தாம்சங்களில் பிரசவகிரஹம் இருக்கவேண்டுமென்று விரும்பப்படுகிறது.

ஆபவத்சாம்சத்தில், ஜலகோசம் இருக்கவேண்டும்.

ஆபாம்சத்தில், ஜலகுண்டம் இருக்கவேண்டும், என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

மஹேந்திராம்சத்தில் அங்கணம் இருக்கவேண்டும்.

மஹீதராம்சத்தில் அம்மி இருக்கவேண்டும். 107½

முன்பு கூறப்பட்ட கிரஹத்தில், முறையே வஸ்து (வாஸ்து) பேதத்தைக் கூறுகிறேன்:

வஸ்துவானது, திசாபத்திரம், 1, கருடபக்ஷம் 2, காயபாரம் 3 துலாரீயம் 4 என்று நான்குவிதமாகும். 109

𑌗𑍇𑌹𑌾𑌯𑌾𑌮𑌸𑌮𑌂 𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌭𑌦𑍍𑌰𑌕𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌭𑌦𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑌣𑌂 𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌟𑌭𑍂𑌮𑌯𑌃 ॥௱௰॥

𑌶𑍇𑌷𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 ।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌯𑌥𑌾 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌗𑌰𑍁𑌡𑌪𑌕𑍍𑌷𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௱௰௧ ॥

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌾𑌯𑌾𑌮𑌾𑌯𑌾𑌮𑌂 𑌪𑌞𑍍𑌚𑌭𑌾𑌗𑌿𑌕𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑍇𑌷𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌭𑌾𑌗𑌿𑌕𑌮𑍍 ॥ ௱௰௨ ॥

𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।

ஒவ்வொருதிக்கிலும் கிரஹத்தின் நீளத்திற்கு ஸமமாக பத்திரம் இருக்கவேண்டும்.

திக்குகளில் அங்கணத்தைக் கல்பிக்கவேண்டும். விதிக்குகளில் பிரதிவாடபூமி (புஷ்பவாடியைப்போன்ற விடம்) இருக்கவேண்டும்.

மற்றவை முன்பு கூறப்பட்டிருப்பதைபோலவே இருக்க வேண்டும். இது விசேஷித்து, பிராஹ்மணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும் கூறப்பட்டதாகும். 110½

அரசர்களின் கிரஹத்திலும், கருடபக்ஷ விதியாகும்.

கிரஹமானது, விஸ்தாரத்தைப்போல், இரண்டு 2 பங்கு நீளமுடையதாக இருக்கவேண்டும்.

அந்த நீளத்தை ஐந்து 5 பாகங்களாகச் செய்து கொள்ளவேண்டும்.

அதில் இரண்டு 2 பாகங்களை மேற்கில் ஒதுக்கி, மீத முள்ளதை அறுபத்திநான்கு 64 பாகங்களாகச் செய்து கொண்டு, அதில், மண்டபாதிகளான எல்லாவற்றையும், முன்புபோலவே கல்பிக்கவேண்டும்.

வ்யாஜநம் தக்ஷிணாவாஸம் ஶேஷம் போகாதிவாஸகம் ॥ ௧௧௩

ப்ருங்கராஜாக்நிதௌவாரிகே ஸுக்ரீவே சித்ரபாகிகே ।
ஸூதிகாகாரஸம்யுக்தம் அதஶ்ச ஹிங்க்வாதிஸங்க்ரஹம் ॥ ௧௧௪ ॥

வாஹநம் த்வாரவாமே ச தாநஶாலா ச வாருணே ।
அஸுரே தாந்யவாஸம் ஸ்யாதாயுதம் இந்த்ரராஜகே ॥ ௧௧௫ ॥

மித்ரவாஸம் ததா மித்ரே ரோகே உலூகலயந்த்ரகம் ।
பூதரே கோஶகேஹம் ஸ்யாந்மாம்ஸே ப்ருதக்ஷயம் ॥

அவைகளில், தென்பக்கத்தில் இருக்கும் வாஸமானது, பிரதானவாஸமாகும். மீதமுள்ளது போகாதிவாஸமாகும். (இது கருடபக்ஷவிதியாகும்.) 113

பிருங்கராஜாம்சம், அக்கினி அம்சம், தௌவாரிகாம்சம், சுக்ரீவாம்சம் - சித்திரபாகம், இவைகளில் பிரஸவகிரஹம் .... இவைகளிருக்க வேண்டும். அங்கு, பெருங்காயம் முதலிய சாமான்கள் வைக்குமிடமுமாகும். 114

துவாரத்தின் இடது பக்கத்தில் வாஹனம் இருக்க வேண்டும்.

வாருணபதத்தில் தானசாலை இருக்கவேண்டும். அஸுராம்சத்தில் தானியவாஸம் (நெல் களஞ்சியம்) இருக்க வேண்டும்.

இந்திர ராஜாம்சத்தில் ஆயுதங்கள் இருக்கவேண்டும்.

மித்திராம்சத்தில் மித்திரர்கள் (ஸ்னேஹிதர்கள்) வஸிக்குமிடமிருக்கவேண்டும்.

ரோகாம்சத்தில் உலூகலயந்திரம் (உரல் உலக்கை முதலியவைகள்) இருக்கவேண்டும்.

பூதராம்சத்தில் கோசகிரஹம் (பொக்கிஷம்) இருக்க வேண்டும்.

ஜயந்தே ஆபவத்ஸே ச பர்ஜந்யே ச ஶிவே க்ரமாத் ।
விஷம் ச விஷஜாதம் ச கூபம் தேவாலயம் பவேத் ॥ ௧௧௭ ॥

ஸவித்ராத்யந்தரிக்ஷாந்தம் ஸவ்யஞ்ஜநமஹாநஸம் ।
விததே பூஷ்ணி ஸாவித்ரே ஹ்ருத்யம் போஜநமந்திரம் ॥ ௧௧௮ ॥

ஸம்பத்ஸம்யுக்தகாநாம் வைஶ்யாநாம் ப்ரவிதீயதே ।
உசிதம் யதோசிதம் ஸர்வம் த்யக்த்வா பஶ்சிமபாகத꞉ ॥ ௧௧௯ ॥

காயபாரமிதி ப்ரோக்தம் துலாநீயம் ப்ரவக்ஷ்யதே ।
விஸ்தாரத்விகுணாயாமஸ்தம்பம் ஸர்வாங்கஸம்யுதம் ॥ ௧௨௦ ॥

நாகாம்சத்தில் நெய், மருந்து இவைகள் இருக்க வேண்டும். 116

ஜயந்தாம்சம், ஆபவத்ஸாம்சம் பர்ஜந்யாம்சம் சிவாம்சம், இவைகளில் முறையே, விஷம், விஷசாதம் (ஸௌக்கியத்தைக் கொடுக்கக் கூடிய விஷம்), கிணறு, தேவாலயம் இவைகளிருக்க வேண்டும். 117

